திரு. செ. முத்துசாமி : கல்வித்துறையினுடைய சில ஆணைகள் கெஜட்டிலே வருவதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது உண்மைதான். அரசு ஆணைகள் பொதுவாக கெஜட்டிலே பிரசுரிக்கப்படாவிட்டாலும்கூட, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கல்வித் துறையிலே வெளியாகின்ற அரசு ஆணைகளின் நகல் அச்சிடப்பட்டு, அந்த ஆணைகள் அனுப்பப்படுமா? அவை கெஜட்டிலே வெளியாகாவிட்டால், சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனியாக அரசு ஆணை நகல் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு ஆணைகள் பெரும்பாலும் அரசு இதழிலே வெளியாகின்றன என்றுதான் கருதுகின்றேன். தேர்வு முடிவுகளைப் பொறுத்தவரையிலேதான், அரசுப்பதிவு இதழிலே வருவதில்லை என்று நான் கருதுகிறேன். அந்த நிலைமைகள் இருக்குமேயானால், அதை வேறு எந்த வகையிலே வெளியிடலாம் என்பதைப் பற்றி அரசு ஆராயும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினா எண் 255 ஒத்தி வைக்கப்படுகின்றது.

Drinking water from Vaigai to Virudhunagar.

***256 Q.—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :**

(*a*) whether the Virudhunagar Municipality has passed a resolution requesting the Government to bring drinking-water from Vaigai ; and

(*b*) if so, the steps taken thereon by the Government ?

விருதுநகருக்கு வைகையிலிருந்து குடிநீர்

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) விருதுநகருக்கு வைகையில் இருந்து குடிநீர் கொண்டு வர வேண்டும் என்று அந்நகரசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) நகராட்சியின் தீர்மானம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமைப்பொறியாளர் அவர்களுக்கு வந்துள்ளது. தலைமைப்பொறியாளர் அலுவலகத்தில் இது பரிசீலனையில் உள்ளது.

1975 ஏப்ரல் 19]

திரு. வே. தங்கப்பாண்டியன் : விருதுநகர் பகுதிக்கு பக்கத்திலேயுள்ள துலுக்கப்பட்டியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் சமீபகாலத்திலே ஆராயப்பட்டு, அத்திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவ தாகக் கேள்விப்படுகிறேன். அந்தத் திட்டத்தையாவது ஆராய்ந்து குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு முடிவு காண அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அங்கத்தினர்கள் சொல்வதுபோல, அருச்சுனு என்ற ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் இந்தத்திட்டம், ரூ. 72.43 லட்சத்திற்கு தயார் செய்து, இதுவரையில் 67·5 லட்சம் ரூபாய் அளவுக்கு செலவாகியிருக்கின்றது. மேற்கொண்டு வேலைகள் சீக்கிரமாக முடிந்துவிடும். அங்கத்தினர் அவர்கள் கேட்டிருக் கின்ற புதிய வைகைத்திட்டம் 2 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீடு உள்ளது. நிர்வாகச்செலவே, ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் வருகின்ற காரணத்தினுலே, முதல் திட்டமே இந்த நகராட்சிக்குப் போதும் என்று கருதுகிறேன்.

திரு. கே. ராஜாராம் : வைகை அணையிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதைப்பற்றிய யோசனை எந்த நிலையில் இருக்கிறது, வைகை ஆற்றி லிருந்தா அல்லது வைகை அணையிலிருந்தா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, தீர்மானத்திலே "வைகை ஆற்றிலிருந்து" என்று போட்டிருக்கின்றுர்கள். இங்கு "வைகையிலிருந்து" என்று போட்டிருக்கிறது. அது அணையா ஆரு என்று இல்லை. ஆக ஆற்றிலிருந்துதான் என்று நாம் வைத்துக் கொண்டால், முதலிலே சொன்ன மாதிரி, அருச்சுனு ஆற்றிலேயிருந்து கொண்டு வருவதற்கு முன்னுலேயே ரூ. 72.43 இலட்சத்திற்கு ஒரு திட்டம் இருக்கின்றது. அந்தத் திட்டத்தின்கீழ் இப்போது கிட்டத் தட்ட ரூ. 67.5 இலட்சம் செலவாகியிருக்கின்றது. அதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இப்போது கொஞ்சம் மீதம்தான் இருக்கிறது. இப்போது புதிய திட்டத்தை மேற்கொள்ளுவோமானுல், அந்த நிர்வாகத் திற்குக் கஷ்டமாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : வைகை ஆற்றிலிருந்துதான் மதுரை மாநக ராட்சிக்குத் தண்ணீர் இப்போது வழங்கப்பட்டு வருகிறது. ஒரு மணி நேரத் திற்குக்கூட மதுரை நகரத்திற்குத் தண்ணீர் வரவில்லை என்பதுதான் இப்போதுள்ள நிலைமை. ஆகவே, வைகை ஆற்றிலிருந்து வரும் தண்ணீர் மதுரை நகருக்கே போதாமல் இருக்கும் போது, விருதுநகரைப் பற்றி நினைக்கக் கூட முடியாது என்ற நிலைமையிருக்கின்றது. அப்படிச் செய்வ தாக இருந்தால், வைகை அணையிலிருந்தே மதுரை நகரத்திற்கும், விருது நகருக்கும் சேர்த்துக் கொடுப்பதற்கு எற்பாடு செய்யும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நான் முதலிலேயே சொல்லி விட்டேன். முதலிலேயே அருச்சுனு ஆற்றிலிருந்து நீர் கொண்டு வரும் ஒரு திட்டம் இருக்கிறது. புதிய திட்டத்திற்கான செலவையும் நிர்வாகத்தையுமே அந்த நகர சபையால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே, மேலும் ஒரு திட்டம் தேவையில்லை என்று சொல்லிவிட்டேன்.

Renovation Committee appointed for the Gangaikonda Cholapuram Temple.

* 231 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether it is a fact that the Renovation Committee appointed for the Gangaikonda Cholapuram Temple, Thanjavur district is not functioning; and

(*b*) if so, the action taken thereon by the Government?

கங்கை கொண்ட சோழபுரம் திருக்கோயிலுக்கு அமைக்கப்பட்ட திருப்பணிக்குழு.

மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள கங்கை கொண்ட சோழபுரம் திருக் கோயிலுக்கு அமைக்கப்பட்ட திருப்பணிக் குழு இயங்கவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) உண்மையல்ல. அருள் மிகு கங்கை கொண்ட சோழபுரம் திருக்கோயில் தஞ்சை மாவட்டத்தில் இல்லை; திருச்சி மாவட்டத்தில் இருக்கிறது.

(இ) இவ்வினு எழ இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: துணைத் தலைவரவர்களே, இந்த மார்ச் திங்களிலே இந்த மன்றத்திலே நிதி அறிக்கையின் மீது முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, தஞ்சைக் கோயிலிலே இராஜராஜ சோழன் சிலையை வைப்பதற்காக நாம் மத்திய அரசிடம் அனுமதி கேட்டு, இல்லை என்று அவர்கள் சொல்லி, இப்போது அங்கே வராகி அம்மன் சிலையையும் அதற்கு ஒரு மண்டபமும் கட்டியிருக்கின்றுர்கள் என்பதையும் நினைவு படுத்தினுர்கள். அந்த இடத்தை நானும் போய்ப் பார்த்தேன். புதிதாக ஒரு மண்டபத்தைக் கட்டியிருக்கின்றுர்கள். அதையும் நான் இப்போது நினைவு படுத்தி, இதுபோல மத்திய அரசு தமிழக அரசை,—ஆங்கிலத்திலே